[illegible]

4

Q6:4N7
H19
178573.

738

# யேசு நாமப் பதிகம்

15 FEB 1919
MADRAS.

BY

W. A. செல்லய்யாப்பிள்ளை

738
1.19

PRINTED AT
…COTTAH PRINTING PRESS
1919

15 FEB .9.9

# நாமப் பதிகம்

கடவுள வாழ்தது

ா வண்ணம் திருவவ தாரம் பூண்டு
த்த வேந்தே புனிதமா புண்ய மூர்த்தி
வன்றநின்றன் சரண் புகழ் வழுத்துமாறு
தாரா யெற்கு நலந்தரு பாக்கள் சொல்ல.

739
1:19

## 1

பேசு நாமப் பதிகம்

மண்ணிலும் விண்ணிலும் வல்லமு தாயது
எண்ணில நாவு கொண்டேத் தரும் பாலது
தண்ணளி சீர்மிகு சாற்றருந் தவமது
எண்ணருங் குணத்ததே யேசு நாமமே.

ாலே யகற்றிடும் என்னிதயத்துளே
வ தீவினையெலாம் தொலையச் செய்திடும்
ிடுவோர் தமை யுயர் கதிக் குய்த்திடும்
னுறு நலந்தரும் யேசு நாமமே.

தனைப் பரவசப் படுத்திப் பாரினில்
த்தமும் நீதியின் நெறியி லுய்த்திடும்
த்தனை தீதுகள் எய்தப் போதினும்
த்திட நீங்கிடும் யேசு நாமமே.

178573
-600 00

4. தேனிலு மினியது தெள்
வானினும் புவியினும் மா
மோன நற்பொருளது மூதல
ஏனமதகற்றுவ யேசு நாமமே.

5. மன்னுயிர் எவர்க்கும் மல்கிய விழுநிதி
இன்னுயி ரோம்புதற் கேற்றசஞ் சீவிதம்
தன்னிகர் வேறிலாத் தண்ணளிச் சாகரம்
என்னுயிர்த் துணையதிங் கேசு நாமமே.

6. பாதகப் பிணியினைப் பாழ்க்கு மோடதம்
காதகக் கூளியைக் கடியுமோர் கடு
மாதவ நாடடை வோர்க்கு மாபுணை
ஏதமில் மந்திரம் யேசு நாமமே.

7. மண்ணில மேவிய மையறு மாவினை
அண்ணலர் அழித்திடற் கான்ற வாயுதம்
நண்ணிய பவ வினை நசிக்கு மந்திரம்
எண்ணில தகை யுடை யேசு நாமமே.

8. மங்கள வாய்ச்சொலால் வானவ
துங்க நற்றவர் கடம் துனிய கற்
பங்க மில்லாமலே காக்கும் பண்
எங்கணும் பரவிடும் யேசு நாமமே

9. பொன்னே மாதனை பூமியை நாடிடும்
இன்னில மாந்தருக் கேய்ந்த ஓர்கதி
துன்னு நர் தமையளி தூயமா நிதி
என்னேயாள் கின்றதிங் கேசு நாமமே.

10. புண்ணிய மோருருப் புகுத வுய்த்திடும்
நண்ணினர்க் கன்பினை நல்கு நன்மையே
திண்ணிய பவவினை தீர்க்கு மென்றுமே
எண்ணிய தருளிடு மேசு நாமமே.

## 2

ராகம்: கமாஸ் தாளம்: ரூபகம்

பல்லவி

நல்ல நாளிதே, ஸ்வாமி, இறையே

Q6:417
7N19

சரணங்கள்

1. வல்ல மைந்தனார் பூவில் மேவி
மன்னு நரர்க்கு ஜீவனீந்து
கல்லறை விட்டொல்லை யெழுந்த —நல்லநா.

2. நித்ய வாழ்வை நமக்கீய
நீண்ட நரகம் அலகைவென்றே
வெற்றி சிறந்தே விளங்கிநின்ற —தூயநா.

3. சித்தம் கொண்டுநீர் ஜீவன்விட்டு
சீடர்க்கு மரியாட்குமே
திருத்தியே யுண்டாக்கவே —உயிர்த்தநா.

## 3

ராகம்: அடாணா தாளம்: ஆதி.

பல்லவி

வாச்சாம கோச்ச ரூடனீ

அனுபல்லவி

நீ பாபவுலகு மன்பதை புரந்தனை
ஜெகதீஸ பாப நாஸனே
கருணா பயோததி —வாச்சாம.

சரணங்கள்

1. நீ புனருலகம் ஒருவி இம்மேதினியில்
மாய்ந்த பரமா புண்யா
சார்வதா நின்தன் நீதிக்ருபையை
நாவால் யாரும் நவில வொல்லாதய்யா—
சநித சநித சநிபத ரிசநித
நிசநி நிசநி சநித பத தரிரிச
சரிரிச தகரிச ரிரிசநி
சநிதப பம கமப —வாச்சாம.

2. நீ பவித்ரகுண ரூப உபசாந்தமிகு
தூய பரம நித்ய
நீச எம்மனோர் நின்முன் நிற்பதெவ்
வாரியம்பு ஞானப்ரபுவய்யா
சநித, மி —வாச்சாம.

## 4

ராகம்: நாகஸ்ரவாளி தாளம்: ஆதி.

பல்லவி

ஸ்ரீக்றிஸ்தே நீ பரா
உந்தனை பஜிப்போமே.

அனுபல்லவி

நீ பரதீசை நீத்து எம்
பாபரோகங்கள் ஒழித்த ஜேசே.

சரணம்

ராஜாதி ராஜா அலகைகள் நாசா
பூதலம் நீ ரக்ஷா பெருமான்

ஆதலால் நாங்கள் எல்லோரும்
ராஜனின் ஸ்ரீபாதம் போற்றுவோம்.
—ஸ்ரீக்றிஸ்தே.

5

ராகம்: கமாஸ் தாளம்: ஆதி

பல்லவி.

ஈசா நேசா நிரஞ்சனா
எமக்கிப் பாரினில் தாரகம் யாரோ

அனுபல்லவி.

மாது பயந்த சுகுமாரா சுந்தரா —ஈசா.

சரணம்.

பரம தயா மேக ஆரூடனா
புனிதா, நாதா, மன்னு
நரர் புரந்திடும் —ஈசா.

6

பல்லவி.

பாவ விநாசா, பாவியர் நேசா
பத்தனைக் காத்துர க்ஷித்தருளீசா

அனுபல்லவி.

அலகையின் சதிதான் ஐயோ கொடிது
எந்தனைக் காத்துர க்ஷித்தருளீசா —பாவ.

## 6

சரணம்.

பசாசின் பயம் நீங்க பரனே
யென் செய் வேன்
பக்ஷம் வைத் தெந்தனை யாண்
டருளீசா, —பாவ.

## 7

1. இந்த மங்களஞ் செழிக்கவே
தேவே யிந்த மணப் பந்தலி லெழுந்திராய்
உந்தன் வரம் இந்த மண மக்களுக்கு
என்று மேதா
ஓயாமல் இவரை யாதரித்தருள் செய்
* * *
* * *
இனிதே நெடு நாள் உலகில்
வாழவே கிருபையை நீ யருள் —இந்தமங்.

2. இன்று மென்று மெங்கு மல்கிய
யேகோ வா ஆதி திரியேக தேவனே
இவ் விவாகச் சீரனைத்தும் கண்டு
களிப்போர் தனையும்
ஆசீர் வா தந்தனைத் தந்து காயிவற்கே
புத்ர சந்தானமும் மற்றுள்ள
பாக்யமும் சற்றுங் குறை
விலா தெக்காலு மீந்து மே
கருணை கரனே பாலியா யிவர் பால்
கிருபையை நீ யென்றும். —இந்த மங்.

## 8

### நொண்டிச்சிந்து.

1. ஆலயம் போவோம் வாரும்
(நம்) ஆண்டவர் தம் நாளிலவர்
தாள் தொழவே, —ஆலயம்.

2. மாதவனைத் தொழுதிடுவோம்
மல்கிய உலகக் கவலை கள் மறந்து
—ஆலயம்.

3. தம்புரு வீணைகளோடு
(பல) தாளமுடன் நாதனைத்
துதித்திடவே —ஆலயம்.

178573

4. மூன்றிரண்டு பேர்களேனும்
(நம்) முன்னவனின் நாமமதில்
ஒன்று கூடினால்,

5. அன்னவர்கள் மத்தியிலே தான்
(நம்) ஆண்டவனிருப் பனென
வாக்களித்த தால் —ஆலயம்.

6. நல்ல பிரசங்கங் கேட்டு
(நம்) நடத்தைகள் சீராகி நலம்
பெறவே, —ஆலயம்.

7. நம் சிறுவர் பின்பற்று தற்காய்
(ஒரு) நல்ல மாதிரி தனையே நாமே
காட்ட, —ஆலயம்.

## 9

மாசிலா மைந்தனே யேசுவே
நீசனெற் குந்தனின் சிந்தனையின் றருளாய்
பாலியாய் ஏழையேன் நித்தமு முன்
பாதபங் கேருகம் போற்றிடவே
மன்பதை யின்புற வைகலும் தாங்கிடப்
பாரினில் மேவிய மாதவனே.

## 10

(பர்மாவோ சர்மாவோ என்ற ராகம்).

கருணாலய பரனே யடியனுக்
கனுக்ரஹம் அருளியே ஆள்
புரிந்த பவங்கள் சுவர்க்க
வேந்தே என் மனம் வாதிக்குதே
பவநாச, பவநாச,
நின் பாதம் அப்பனே யடைந்தேன்
சரணம் அருளால்
தினம் எனைக்கா.

## 11

ராகம்: நாத நாமக்கிரியை.

பாருலகத்துறு பாரத்தை நீத்து நான்
பரகதி யடைவது எப்போ எப்போ
(நின்) பாதார விந்தம் பாரவிப்
புகழைப் பாடி நான் சுகித்
திருப்பது எப்போ எப்போ.

## 12

(வாட்டியென்னை யென்ற ராகம்)

பாவி கொடும் பாவி யெனைப் பாவ
வழியே செலாமல்
ஆவி கொடுத்தா தரிப்பாய் தாம
தமிலா துடனே
பூவி லொரு மானுடனும் கேட
டையாக் காதலனே,
க்ருபை யாலே.

## 13

(வங்கார மாரபிலணி யென்ற ராகம்)

1. என்னேர பாவியரின் பாவச்சும்மை
நீங்கிடவே
மன்னே யுன் னுருயிரை யீந்தெமக்கு
ரக்ஷணிய
சன்மார்க்க பாதை யினை யீட்டிக்
கரை யேறவருள் —குமரேசா.

2. எல்லாரு முய்யும் வா்ரின்னில வுலகில்
வந்து மிக
பொல்லாத பேயொட மராடி
ஜெய கோலம் பெரும்
வல்லானுன் பாதமலர் போற்ற
வருள் தண்ணளியால் —பெருமானே

## 14

பொன்னார் மேனியனே
புகழெங்கும் படைத்தவனே
மன்னு வுன் சமுகம்
பவச் சிந்தை நிறைந்த என்னை
அன்னார் எவ்விதமே
அடையும் வழி செப்பிடுவாய்
தன்னேர் ஒன்றுமில்லான்
ஒரு தண்ணளிச் சாகரமே.

## 15

(கருவினுருவாகி என்ற ராகம்)

கனிமரி சேயா யுதித்து
வயதளவிலே வளர்ந்து
கிரியை பலவே யிளைத்து
சிறந்தாய் நீ ஸ்வாமி
குரிசிலுயி ரீந்து யெங்கள்
பவச்சுமை யெலாம் தொலைத்து
கவலையாவும் நீக்கிக் காத்து
வெற்றி சிறந்தாய் ஸ்வாமி.

## 16

கனி தின்ற பாவமதனால் விளைந்த
கலி நீங்குதற்கு வழியாய்
தனியே யிருந்து புவியாளுமீலன்
தரைமீ துதித்து மனுவாய்
அநியாயமாய்த்தன் னுயிர்மாய்த் தெமக்கு
அனுகூல மெய்தியமையால்
புனிதாவியின்றண் ணளியாலவன்றன்
புகழ்நாம மொன்று புகல்வாம்.

## 17

1. கனியேனெனினுங் கடியாதெனைநீ
இனியாகிலு நான் கனி யீவனெனு
மனியா வருணீ மனரம்மியமாய்
புனிதா விபுதா புயல்வாகனனே.

2. நில்லா வுலகந்தனில் நீதிநெறி
செல்லா மதிகெட்டுத் திரிந்தயரும்
பொல்லானெனை மீட்க புரந்தரனே
வல்லானுனையன்றி மற்றி யாருளரோ.

3. நிலையா வுலகில் நீடிய வினையால்
தொலையா துயிர்நான் கதி துன்னுவழி
விலையா யெனையாள் விமலாதிபனின்
தலையாயினவோ ரிருசட்டமதே.

4. கனியாவுளமே கருணைக் கடலாம்
புனிதாதிபனைப் போற்றிப் புகழாய்
நனிநேரயலான் தனையும் நலுவாய்
இனிதே புரியில் எய்தும் வீடே.

5. ஏதொன்று மிலேன் எளியேன் தமியேன்
நீ தந்திலையேல் நின்நீதிதனில்
தீதொன்று மிலாதெனைச் சேர்த்தனையென்
மீதென் றருள்செய் விமலாதிபனே.

## 18

1. தூதர்குழாம் ஜெயஜெயவென் றேத்த
துங்கவர்க ளீஸனையே வழுத்துநாடு
ஏதமிலா மாந்தரெலாம் ஏகுநாடு
எங்கள் கிறிஸ்தாதிபனின் ஏகநாடு
சாதல் பிணி பசி துயரிலாத நாடு
சந்ததமு மினியகவி முழங்கு நாடு
சோதனைசெய் யலகையின மொழிந்த ந
சொல்லரிய வளநாடு சொர்க்கநாடே.

2. அந்த மிலாவெழில் பெருகு புனித நாடு
ஆதவனு மொளிர் மதியு மியலா நாடு
நந்த மிலா ஜீவ நதி பாயு நாடு
நம்பினர்கள் மகிமை முடி சூடு நாடு
போந்த பொன்தள வீதி பொலியு நாடு
போலிய நாடொன்று மிலாப் புண்ய நாடு
சுந்தரமாம் ஜீவதரு துலங்கு நாடு
சுக நாடு மக நாடு சொர்க்க நாடே.

178573

The Palamcottah Printing Press—1919.

IA
5.16